


**சக்கர வியூகம்**
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
PRGI NO: TNTAM/25/A1018




Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 231 13.2.2026 FRIDAY THAI : 30 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 231 13.2.2026 வெள்ளிக்கிழமை தை : 30 விலை : ரூ.5/–

## பட்ஜெட் குறித்து லோக்சபாவில் நிதியமைச்சர் நிர்மலா உரை

# “பிரதமர் மோடி பாராட்டு!”





புதுடில்லி : பிப்.13-

லோக்சபாவில் பட்ஜெட் தொடர்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசிய வீடியோவை சமூக வலைதளத்தில் பகிர்ந்து பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்

பார்லிமென்ட் பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்து வருகிறது . இரண்டாயிரத்து இருபத்து ஆறு முதல் இருபத்து ஏழு ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி ஒன்று ஆம் தேதி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார் . தற்போது பட்ஜெட் மீதான விவாதம் நடந்து வருகிறது . நேற்றைய விவாதத்தில் , இந்த ஆண்டு பட்ஜெட் நமது நாட்டின் பொருளாதார மாற்றத்திற்கு எவ்வாறு பங்களிக்கும் என்பது குறித்த விரிவான விளக்கத்தை நிர்மலா சீதாராமன் லோக்சபாவில் அளித்தார்

பாராட்டு . ' காங்கிரஸ் எம் பி ராகுல் , மத்திய பட்ஜெட்டை படிக்காமல் வந்து பேசி உள்ளார் . ஏழைகள் , விவசாயிகள் நலனை விற்றதே காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தான்' என நிர்மலா கடுமையாக சாடி பேசி பதிலடி கொடுத்து இருந்தார் . இந்நிலையில் இன்று நிர்மலா சீதாராமன் பேசிய வீடியோவை சமூக வலைதளத்தில் பகிர்ந்து பிரதமர் மோடி பாராட்டுக்களை தெரிவித்து இருக்கிறார்

முக்கியத்துவம் . இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் , ' இந்த ஆண்டு பட்ஜெட் நாட்டின் பொருளாதார மாற்றத்திற்கு எவ்வாறு பங்களிக்கும் என்பது குறித்து நிர்மலா சீதாராமன் விரிவான விளக்கத்தை அளித்துள்ளார் . சீர்திருத்த நடவடிக்கை கள் , சிறு , குறு தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவு , திறன் மேம்பாடு , அடுத்த தலைமுறை உள்கட்டமைப்புக்கு ஊக்கம் , கல்வி உள்ளிட்ட பலவற்றிற்கு முக்கியத்துவம் குறித்து பேசியுள்ளார்' என குறிப்பிட்டுள்ளார்



## விளையாட்டுப் போட்டிகளே இளைஞர்களிடையே ஒற்றுமையை வளர்க்கும்: அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

திண்டுக்கல், பிப்.13-

திண்டுக்கல் மாவட்டம், குட்டத்து ஆவாரம்பட்டி 7நி ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் வரும் 7ம் தேதி நடைபெறவுள்ள மாநில அளவிலான கபாடி போட்டிக்கு தலைமை தாங்க வருகை தரும்படி, கபாடி வீரர்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து அழைப்பு விடுத்தனர்.

அமைச்சர் உரையின் சிறப்பம்சங்கள்: “விளையாட்டுப் போட்டிகளே கிராமப்புற இளைஞர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துகிறது.” ஆத்தூர் தொகுதியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த விரும்பும் இளைஞர்களுக்குத் தேவையான நிதி உதவியும், உபகரணங்களும் தொடர்ந்து வழங்கப்படும். இளைஞர்களின் நலன் காப்பதில் தமிழக அரசு என்றும் உறுதுணையாக இருக்கும்.

இந்தச் சந்திப்பின் போது கபாடி வீரர்கள் அமைச்சருக்கு சால்வை அணிவித்து தங்களது அன்பையும், நன்றியையும் வெளிப்படுத்தினர். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி கரியாம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட சின்ன நாச்சியப்ப கவுண்டன் வலசு கிராமத்தில், ரூ 9.97 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள உணவு தானிய கிட்டங்கியை பயன்பாட்டிற்கு, உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி திறந்து வைத்தார். உடன் ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சய் காந்தி, மாவட்டத் துணைப் பதிவாளர் சு.பா.கார்த்திகேயன், தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தாஹிரா , குமரன் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.

## விஜய் மல்லையா நாடு திரும்ப வேண்டும் : மும்பை உயர்நீதிமன்றம் கண்டிப்பு

மும்பை : பிப்.13-

பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா கண்டிப்பாக இந்தியா திரும்ப வேண்டும் . நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணித்துவிட்டு நிவாரணம் கோர முடியாது , என மும்பை உயர்நீதிமன்றம் தெரிவித்து உள்ளது

பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா பல்வேறு வங்கிகளில் ஒன்பதாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடன் வாங்கிவிட்டு திரும்ப செலுத்தாமல் மோசடி செய்ததாக வழக்குகள் தொடரப்பட்டன . இதையடுத்து , இரண்டாயிரத்து பதினாறில் அவர் ஐரோப்பிய நாடான பிரிட்டனுக்கு தப்பி சென்றார் . கடந்த இரண்டாயிரத்து பத்தொன்பதில் தப்பியோடிய பொருளாதார குற்றவாளியாக அவர் அறிவிக்கப்பட்டார் .



தப்பியோடிய பொருளாதார குற்றவாளிகள் சட்டத்தை எதிர்த்தும் , தன்னை பொருளாதார குற்றவாளியாக அறிவித்ததை எதிர்த்தும் இரு மனுக்களை மும்பை உயர்நீதிமன்றத்தில் விஜய் மல்லையா மனு தாக்கல் செய்தார்

இந்த மனுக்களை தலைமை நீதிபதி சந்திரசேகர் தலைமையிலான அமர்வு விசாரித்து வருகிறது . இந்த மனு முன்பு விசாரணைக்கு வந்த போது , இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் எனில் , அவர் நாடு திரும்ப வேண்டும் என உத்தரவிட்டு இருந்தார்

இந்நிலையில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது . அப்போது நீதிபதிகள் கூறியதாவது : விஜய் மல்லையா கண்டிப்பாக நாடு திரும்ப வேண்டும் . அவர் நாடு திரும்பாவிட்டால் இந்த மனுவை விசாரிக்க மாட்டோம் . நீங்கள் நீதிமன்ற நடவடிக்கையை தவிர்க்கிறீர்கள் . வேண்டுமென்றே நீதிமன்ற நடவடிக்கையை புறக்கணித்து விட்டு , நிவாரணம் கோர முடியாது . இந்த மனுவை நாங்கள் தள்ளுபடி செய்யவில்லை . உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குகிறோம் எனத் தெரிவித்து விசாரணையை ஒரு வாரத்துக்கு ஒத்திவைத்தனர் .

## தென்காசியில் முன்னாள் படைவீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 21 மனுக்கள் பெறப்பட்டன

தென்காசி, பிப்.13

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் தொழில்முனைவோர் கருத்தரங்கம் நடைபெற்றது. தலைமை மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் தலைமை தாங்கி, முன்னாள் படைவீரர்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களிடமிருந்து இலவச வீட்டுமனைப் பட்டா, அடிப்படை வசதிகள் செய்து தருதல், பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மொத்தம்




21 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்களைப் பரிசீலித்த மாவட்ட வருவாய் அலுவலர், அவற்றை உரிய துறைகளுக்கு அனுப்பி, விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்குப் பரிந்துரைத்தார்.

நிகழ்வில் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் மேஜர் (மருத்துவர்) ப.அருள் அஸ்வின் (ஓய்வு), மாவட்ட தொழில் மைய மேலாளர் மாரியம்மாள், திறன் மேம்பாட்டு பயிற்சி மைய உதவி இயக்குநர் கோபிநாத் மற்றும் 70க்கும் மேற்பட்ட முன்னாள் படைவீரர்கள் கலந்துகொண்டனர்.

## அரசு, பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்துக்கு முன்னதாக வந்தே மாதரம் பாடல் இசைக்க உத்தரவு

புதுடெல்லி, பிப்.13.-

அரசு மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும். அப்போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

வங்கமொழி கவிஞர் பக்கிம் சந்திர சட்டர்ஜி கடந்த 1875ம் ஆண்டு நவம்பர் 7ம் தேதி வந்தே மாதரம் பாடலை இயற்றினார். சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இப்பாடல் மிகப்பெரிய உத்வேகம் அளித்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கடந்த 1950ம் ஆண்டு ஜனவரி 24ம் தேதி வந்தே மாதரம் தேசியப் பாடலாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. இதை மத்திய அரசு கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் வந்தே மாதரம் பாடலுக்கு புதிய



விதிமுறைகளை மத்திய அரசு வகுத்துள்ளது. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது: அரசு மற்றும் பள்ளி நிகழ்ச்சிகளில் தேசிய கீதம் (ஜன கன மன) இசைக்கப்படுவதற்கு முன்னதாக தேசியப் பாடலான வந்தே மாதரம் கட்டாயம் இசைக்க வேண்டும்.

கடந்த 1937ல் நீக்கப்பட்ட 4 வரிகள் உட்பட வந்தே மாதரத்தின் அனைத்து 6 சரணங்களும் பாடப்பட வேண்டும். இது 3 நிமிடம், 10 வினாடிகள் நீளமுடையதாக இருக்கும். குடியரசுத் தலைவர், ஆளுநர் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பத்ம விருதுகள் உள்ளிட்ட அரசு விருது வழங்கும் நிகழ்ச்சிகள், தேசியக் கொடி ஏற்றுதல் போன்ற அதிகாரப்பூர்வ நிகழ்ச்சிகளில் தேசியப் பாடல் பாடப்பட வேண்டும்.

வந்தே மாதரம் பாடும் போது அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்த வேண்டும். தேசியப் பாடல் பாடப்படும் சபை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வந்தே மாதரம் பாடும் போது அல்லது இசைக்கப்படும் போது, பார்வையாளர்கள் எழுந்து நிற்பது கட்டாயம் என்றாலும் திரையரங்குகளில் செய்திப் படம் அல்லது ஆவணப் படத்தின் ஒரு பகுதியாக தேசியப் பாடல் இசைக்கப்படும் போது, பார்வையாளர்கள் எழுந்து நிற்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஏனெனில் இதனால் படத்துக்கு இடையூறு ஏற்படுவதுடன் தேசியப் பாடலின் கண்ணியத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக குழப்பத்தை உருவாக்கும். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி 1937ல் நீக்கப்பட்ட வந்தே மாதரம் பாடலின் வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன. தாய்நாட்டை லட்சுமி, சரஸ்வதி, துர்கையுடன் ஒப்பிடும் வரிகளும் இனி இசைக்கப்படும். தேசிய கீதத்தை பாடும் போது கடைபிடிக்க வேண்டிய விதிகள் சட்டப்பூர்வமாக வகுக்கப்பட்டுள்ளன. அதுபோல் தற்போது வந்தே மாதரம் பாடலுக்கும் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. தேசியப் பாடலான வந்தே மாதரம் பாடலை அவமரியாதை செய்தால் 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கும் வகையில் விதிகளில் திருத்தம் கொண்டு வந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.



# அஇஅதிமுக குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் தெருமுனைப் பிரச்சாரம்

திருப்பூர், பிப்.13-

திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்தில், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் சட்ட மன்ற பொது தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, ஆத்து கிணத்துப்பட்டி, பூளவாடி, பெரியப்பட்டி, கள்ளிப்பாளையம், அணிகடவு ஆகிய பகுதிகளில் உடுமலை எம்எல்ஏ துண்டு பிரச்சாரங்களை பொதுமக்களுக்கு வழங்கி மீண்டும் எடப்பாடியார் முதல்வர் ஆனதும் தாலிக்கு தங்கம், அம்மா வீடு கட்டும் திட்டம், நிறுத்தி வைக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் மீண்டும் வழங்கப்படும் என சூளுரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.எம். பிரனேஷ், பெரியபட்டி தியாகராஜன், பூலவாடி சங்கர் கணேஷ், பாஜக நிர்வாகிகள், ஒன்றிய தலைவர் வெள்ளிங்கிரி, ஒன்றிய பொதுச்செயலாளர் துரைசாமி, ஒன்றிய செயலாளர் ஹரி பிரபாகரன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், அ.இ.அ.தி.மு.க கிளை கழக நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



# வாடிப்பட்டியில் அதிமுக சார்பில் திண்ணை பிரச்சாரம் முன்னாள் அமைச்சர் உதயகுமார் பங்கேற்பு

வாடிப்பட்டி, பிப்.13-

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் அதிமுக பேரூர் கழகம் சார்பில் திண்ணை பிரச்சார கூட்டம் நகர செயலாளர் டாக்டர் அசோக்குமார், தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கலந்துகொண்டு பேசினார். அதிமுக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அம்மா உணவகங்கள், அம்மா மினி கிளினிக், அம்மா சிமெண்ட், அம்மா குடிநீர், அம்மா பரிசு பெட்டகம் உள்ளிட்டவை இந்த அரசு நிறுத்திவிட்டது. தமிழகத்தில் மகளிருக்கு விடியல் தருவதாக கூறிய அரசு மக்கள் விடியலை தேடிக் கொண்டுள்ளனர். மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் வழங்குவதாக தெரிவித்த இந்த திமுக அரசு குடும்பத்தில் சண்டையை மூட்டி விட்டு வேடிக்கை பார்ப்பதாக தெரிவித்தார்.

கடந்த அதிமுக ஆட்சியில் ஜெயலலிதா எண்ணற்றத் திட்டங்களை மக்களுக்கு எடுத்து வழங்கினார். அதனை தொடர்ந்து 4 ஆண்டு ஆட்சி செய்த எதிர்க்கட்சி தலைவர் பழனிச்சாமி கொரோனா காலகட்டத்திலும் மக்களுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தினார்.

பொங்கலுக்கு குடும்ப அட்டைக்கு அரிசி சீனி கரும்பு மற்றும் 2500 ரூபாய் பணம் வழங்கியது அதிமுக அரசு வரும் 2026 இல் அதிமுக அமோக வெற்றி பெற்று எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சர் ஆவார் அப்போது மகளிர் உரிமைத் தொகை 2000 அனைவரது அக்கவுண்டுக்கும் வழங்கப்படும்.

அதேபோல் அனைத்து திட்டங்களும் நேரடியாக தங்களது இல்லத்திற்கே வந்து வழங்கப்படும் என தெரிவித்தார்.

இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, வெற்றி வேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்மாணிக்கம், ஒன்றிய செயலாளர்கள் காளிதாஸ் அரியூர் ராதாகிருஷ்ணன், மாவட்ட மகளிரணி செயலாளர்லட்சுமி, எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணைச் செயலாளர் ஜெயச்சந்தி ரமணியன், மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார், கோட்டைமேடு பாலன், மகளிரணி சாந்தி, மருதாயி, முன்னாள் அரசு வழக்கறிஞர் ராஜ்குமார், தொழிலதிபர் தர்மர், வக்கீல் அழகர்சாமி, காசிமாயன்,உள்பட பலர் கலந்து கொண்டனர்..



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், சேலம் மாவட்டம் வாழப்பாடி மு.க.ஸ்டாலின் அரங்கத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான கராத்தே போட்டியில், திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த அரசு மாணவ மாணவியர்கள் தங்கப்பதக்கம் பெற்றதை தொடர்ந்து சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.



■ தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட நிர்வாகம் மற்றும் பொது நூலகம் சார்பில் பொருநை இலக்கியத் திருவிழாவினை 2026 மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், துவக்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) மரு.தி.சதன்திருமலைக்குமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் உள்ளனர்.

# “அந்தத் தொகுதிகளை நமக்கு கேட்க வேண்டும்” திருச்சி அமைச்சர்களுக்கு திகில் கொடுக்கும் தோழர்கள்



சென்னை, பிப்.13-

திமுக கூட்டணியில் இரட்டை இலக்கத்தில் தொகுதிகளைக் கேட்போம் என்று இரண்டு கம்யூனிஸ்ட்களும் ஒரே குரலாக ஒலித்திருக்கும் நிலையில் அடுத்த அதிரடியாக, அமைச்சர்கள் நேரு, அன்பில் மகேஸ் தொகுதிகளை தங்களுக்குக் கேட்க வேண்டும் என தீர்மானமும் நிறைவேற்றி இருக்கிறார்கள் தில்லான தோழர்கள்.

திருச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு கூட்டத்தில் திருச்சி மேற்கு, ஸ்ரீரங்கம் ஆகிய தொகுதிகளை இம்முறை திமுகவிடம் கேட்டுப் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி தலைமைக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். இதேபோல் மார்க்சிஸ்ட் கட்சி மாவட்டக்குழு கூட்டத்தில் திருவெறும்பூர், மணப்பாறை தொகுதிகளை கேட்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றி மாநிலக் குழுவுக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

இதில் திருச்சி மேற்கு அமைச்சர் கே.என்.நேருவின் தொகுதி. திருவெறும்பூர் அமைச்சர் அன்பில் மகேஸின் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அமைச்சர்களின் தொகுதிகளை கேட்டு தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறீர்களே... நடக்கிற காரியமா? என்று திருச்சி மாவட்ட மூத்த கம்யூனிஸ்ட் நிர்வாகிகளிடம் கேட்டதற்கு ‘‘நாங்கள் விருப்பம் தெரிவித்துள்ள அமைச்சர்களின் தொகுதிகள் இரண்டிலும் ஏற்கெனவே எங்கள் கட்சிகளின் தலைவர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர். அந்த இரண்டு தொகுதிகளிலுமே கிளை அமைப்பு வரை கம்யூனிஸ்ட் கட்சி வலுவாக உள்ளது.

அரசியலில் எதுவும் சாத்தியம்தான். அதுவும் கூட்டணி அரசியலை பொறுத்த வரை எதுவும் நடக்கலாம். அதனால் நாங்கள் வலிமையாக உள்ள, வெற்றி பெற வாய்ப்புள்ள தொகுதிகள் என்று குறிப்பிட்டு திருச்சி மேற்கையும் திருவெறும்பூரையும் கேட்டுள்ளோம். அமைச்சர்கள் தொகுதி என்பதால் அவற்றைக் கேட்கவில்லை. எங்களுக்கு சாதகமான தொகுதிகள் என்பதால் தான் கேட்கிறோம்’’ என்றனர்.



# சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் இருங்கச்சோளம்: ஆத்தூரில் அறுவடை தீவிரம் குவின்டால் ரூ.5,000க்கு விற்பனை

சின்னாளபட்டி, பிப்.13-

ஆத்தூர் ஒன்றியத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு விவசாயிகள் ஆர்வத்துடன் பயிரிட்ட ‘இருங்கச்சோளம்‘ எனப்படும் சிவப்புச் சோளப்பயிர்கள் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

மகிழ்ச்சியில் விவசாயிகள்: சந்தையில் ஒரு குவின்டால் இருங்கச்சோளம் ரூ.5,000 வரை விற்பனையாவதால், பாளையங்கோட்டை, பிரவான்பட்டி, கூலம்பட்டி மற்றும் சேடபட்டி பகுதி விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மீண்டெழும் பாரம்பரியம்:

30 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த இந்தச் சோளம், இடையில் மறைந்து போனது. தற்போது கடந்த 5 ஆண்டுகளாக இயற்கை உணவு மீதான ஆர்வத்தால் மீண்டும் சாகுபடி அதிகரித்துள்ளது. இதில் புரதம், இரும்புச்சத்து, கால்சியம் மற்றும் பல வைட்டமின்கள் நிறைந்துள்ளன. அரிசியை விட அதிக சத்துக்கள் கொண்ட உணவாக இது பார்க்கப்படுகிறது.

மருத்துவப் பயன்கள் :

சர்க்கரை நோய்: இதில் உள்ள கார்போஹைட்ரேட் ரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்காமல் தடுக்கிறது.

உடல் எடை: உடல் எடையைக் குறைத்து சீராக வைக்க உதவுகிறது. நீண்ட தூரப் பயணங்களின் போது ஏற்படும் ஒவ்வாமைக்கு (Allergy) இது சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.



# திமுகவினரின் ஊழல்கள் தொடர்பாக 2 மாதங்களில் சிபிஐ விசாரணை: அன்புமணி கருத்து

மதுரை, பிப்.13-

மேற்குத் தொடர்ச்சி மலையை நாசம் செய்து, கேரளாவுக்கு கனிம வளங்களைக் கடத்துகின்றனர். திமுகவினரின் ஊழல்கள் தொடர்பாக 2 மாதங்களில் சிபிஐ விசாரணை நடத்தும் என்று பாமக தலைவர் அன்புமணி கூறினார்.

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயிலில் நேற்று பாமக தலைவர் அன்புமணி, அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்ய வந்தார்.

சோலைமலை முருகன் கோயில், ராக்காயி அம்மன் கோயில், பதினெட்டாம் படி கருப்பணசாமி கோயிலில் தரிசனம் செய்து அரிவாளை காணிக்கையாக செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் 5 ஆண்டுகால திமுகவின் ஊழல் நிறைந்த, நிர்வாகத் திறனற்ற ஆட்சி மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். இதனால் வரும் தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெறும்.

எங்கள் கூட்டணி பலமான, தெளிவான கூட்டணி, ஆனால் திமுக கூட்டணி குழப்பமான கூட்டணி. எங்கள் கூட்டணி குறைந்தது 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றிபெறும். திமுக ஒற்றை இலக்கத்தில்தான் வெற்றி பெறும்.

இளைஞர்கள் மது, கஞ்சா, ஊழல் இல்லாத மாநிலம் வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். தென் மாவட்டங்களில் கனிமவள ஊழல் நடந்து கொண்டிருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலை இயற்கையின் வரம். அந்த மலையை நாசப்படுத்தி, இயற்கை வளங்களை அழித்து கேரளாவுக்கு கனிம வளங்களை கடத்துகின்றனர்.

நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் 14 கி.மீ. மேம்பாலத்துக்கு ரூ.2,500 கோடி திட்டத்தை அறிவித்தார். அதில் ரூ.700 கோடி குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரிய தமிழக ஒப்பந்த தாரருக்கு பணி கிடைக்கவில்லை.

ஆனால், அதிகம் லஞ்சம் கொடுத்த ஆந்திர ஒப்பந்ததாரருக்கு பணியைக் கொடுத்துள்ளனர். இப்படி அனைத்து துறைகளிலும் லஞ்சம், ஊழல் நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் 2 மாதங்களில் ஆட்சி மாற்றம் நிகழும். திமுகவினரின் ஊழல்கள் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தும்.

சிறுபான்மையினரை வாக்கு வங்கியாக மட்டுமே திமுக பயன்படுத்தி வருகிறது. நாங்கள்தான் பாதுகாப்பு என்று கூறி அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றனர். இவ்வாறு அவர் கூறினார். பின்னர், மீனாட்சி அம்மன் கோயிலில், குடும்பத்தினருடன் அன்புமணி சுவாமி தரிசனம் செய்தார்.

# “ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம்” - நயினார் நாகேந்திரன் திட்டவட்டம்

மதுரை, பிப்.13-

எடப்பாடி பழனிசாமியிடம் நாங்கள் ஆட்சியில் பங்கு கேட்க மாட்டோம் என பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கூறினார்.

மதுரையில் மார்ச் 1ல் பிரதமர் மோடி பங்கேற்கும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக மதுரையில் பாஜக நிர்வாகிகளுடன் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் கட்சி நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

பின்னர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரையில் மார்ச் 1ல் நடைபெறும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி பங்கேற்பது உறுதியாகியுள்ளது. எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பணிகள் முடிந்த பிறகு திறக்கப்படும்.



திமுக ஆட்சிக்கு வந்தால் கௌரவ விரிவுரையாளர்களுக்கு நல்லது செய்வோம் என தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள். அதை நிறைவேற்றவில்லை. தூய்மை பணியாளர்களை போராட வைத்து தெருவில் நிறுத்தி விட்டு தற்போது சாப்பாடு போடுகிறார்கள். போராட்டம் நடத்துபவர்களிடம் முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தி, எப்படியாவது அடித்து பிடித்து ஆட்சியை பிடித்து கூட்டணி அமைச்சரவை இல்லாமல் நானே முதல்வராகி நல்லது செய்கிறேன் எனச் சொல்லி சமாளித்து வருகிறார்.

தமிழகத்தில் ஆட்சியில் பங்கு கொடுப்பது ஒத்துவராது என முதல்வர் தெரிவித்துள்ளார். கூட்டணியை விட்டு வெளியேறுவதற்கு ஏதாவது காரணம் காங்கிரஸ் கட்சிக்கு தேவைப்படுகிறது. எதற்காக டெல்லி சென்று கனிமொழி ராகுல் காந்தியை பார்க்க வேண்டும். எதற்காக கூட்டணி ஆட்சி ஒத்து வராது என முதல்வர் பேச வேண்டும். எதற்காக காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர் 2026 தேர்தல் பற்றி பேச வேண்டும். எல்லாம் பார்க்கும்போது திமுக காங்கிரஸ் கூட்டணியில் குழப்பம் உள்ளது தெரிகிறது.

நாங்கள் தெளிவாக சொல்லி விட்டோம் தேசிய ஜனநாயக கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி. அவரிடம் நாங்கள் ஆட்சியில் பங்கு எதுவும் கேட்க மாட்டோம். அது பற்றி நாங்கள் கேட்கவும் இல்லை, அவர்கள் தரமாட்டோம் என்றும் சொல்லவில்லை. தேமுதிகவிடம் பாஜக கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை.

சசிகலா புதிய கட்சி தொடங்கினால் அதிமுக ஓட்டுக்கள் பிரியுமா எனக் கேட்கிறார்கள். நாங்கள் யாரையும் கஷ்டப்பட்டு கூட்டணியில் சேர்க்கவில்லை. ஒவ்வொரு எம்ஜிஆர் தொண்டனும் திமுகவை எதிர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளான். தேர்தலுக்கு இன்னும் நாட்கள் உள்ளது. பல மாற்றங்கள் வரும்.

இவ்வாறு அவர் கூறினார். ``மாநில பொதுச் செயலாளர்கள் ராம.சீனிவாசன், கருப்பு முருகானந்தம், மாநில செயலாளர் கதலி நரசிங்கபெருமாள் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ திண்டுக்கல் மாவட்டம் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலக கண்காணிப்பாளரும், பொது சுகாதார துறை அமைச்சு பணியாளர் சங்கத்தின் மாநில துணைத்தலைவரும் அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்ட துணை தலைவருமான மைக்கேல் ஆரோக்கியதாஸ் அவர்கள் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதுடன், நமது தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் இணைப்பு சங்க நிர்வாகிகள் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலகத்தில் பதவி உயர்வின் காரணமாக விடுவிக்கும் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த சூழ்நிலையில் அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பாக மேனாள் ஒன்றியத்தின் பொது செயலாளர் தேவேந்திரன் மற்றும் மாவட்ட தலைவர் பார்த்தசாரதி தலைமையிலும் நிர்வாகிகள் கலந்து கொண்டுவாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



■ ஈரோடு மாவட்டம் சென்னிமலை, கணுவாய் அம்மன் காட்டேஜ்ல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில், பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனை பட்டாவினை செய்தி துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி உட்பட பலர் உள்ளனர்.

# டாஸ்மாக்கில் பாட்டிலுக்கு ரூ.20 கூடுதலாக வாங்கினாலும் திமுகவினர் மீது நடவடிக்கை எடுப்பதில்லை: தங்கமணி குற்றச்சாட்டு

சென்னை, பிப்.13-

'டாஸ்மாக்கில் பணியாற்றும் திமுக தொழிற்சங்க நிர்வாகிகள், ஒரு பாட்டிலுக்கு 20 ரூபாய் கூடுதலாக வாங்கினாலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை' என முன்னாள் அமைச்சர் தங்கமணி குற்றம்சாட்டி உள்ளார்.



ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி டாஸ்மாக் ஊழியர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் நேற்று சென்னையில் பேரணி நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, ஜெயக்குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணி, சிந்தாரிப்பேட்டையில் தொடங்கி எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் நிறைவடைந்தது. இதில் முன்னாள் அமைச்சர் தங்கமணி பேசியதாவது:

மாதம் ரூ.5 ஆயிரம் கோடி வருமானம்: அரசு டாஸ்மாக் கடைகளை குறைப்பதாகக் கூறிவிட்டு, தங்களுக்கு நெருக்கமானவர்களுக்காக ஊருக்கு ஊர் 10க்கும் மேற்பட்ட எஃப்.எல்.2 உரிமங்களை வாரி வழங்கிவிட்டனர்.

டாஸ்மாக் மூலம் அரசுக்கு மாதம் ரூ.5,000 கோடி வருமானம் கிடைக்கிறது. ஆனாலும், அந்த வருமானத்தை ஈட்டித் தரும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற மறுக்கிறது.

நீதிமன்ற உத்தரவு என்ற பெயரில், காலி பாட்டில்களை ஊழியர்களே திரும்பப்பெற வேண்டும் என நிர்வாகம் கட்டாயப்படுத்துகிறது. மிகக் குறுகிய இடத்தில் இயங்கும் டாஸ்மாக் கடைகளில், காலி பாட்டில்களைச் சேமித்து வைக்க இடவசதி இல்லை.

இதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேட்டால் ஊழியர்களுக்குத் தொற்றுநோய்கள் பரவுகின்றன. எனவே, காலி பாட்டில்களைத் திரும்பப் பெறுவதற்கு தனியாக குடோன் வசதி செய்து தரப்பட வேண்டும்.

பாரபட்ச நடவடிக்கை: திமுக தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் பாட்டிலுக்கு 20 ரூபாய் கூடுதலாக வாங்கினாலும் நடவடிக்கை இல்லை. ஆனால், அண்ணா தொழிற்சங்க நிர்வாகிகள் சிறு தவறு செய்தால் கூட உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள். வரும் தேர்தலில் பழனிசாமி மீண்டும் முதல்வர் ஆவார். அப்போது டாஸ்மாக் தொழிலாளர்களுக்கு விடிவு காலம் பிறக்கும். இவ்வாறு அவர் பேசினார்.



# தொழில்நுட்ப உலகில் தடம் பதிக்கும் புளியங்குடி வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள்

புளியங்குடி, பிப்.13

புளியங்குடி வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில், மாணவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வகையில் திட்டக் கண்காட்சி கல்லூரி சேர்மன் முருகையா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கண்காட்சியின் சிறப்பம்சங்கள்:

இயந்திர வடிவமைப்பு, மின்சாரம் மற்றும் மின்னணு சாதனங்கள், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு தலைப்புகளில் மாணவர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தினர். இக்கண்காட்சியை ஏராளமான பள்ளி மாணவர்கள் பார்வையிட்டனர். இதன் மூலம் அவர்களுக்குத் தொழில்நுட்பக் கல்வி மற்றும் எதிர்காலப் பொறியியல் வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கல்லூரி சேர்மன் முருகையா மாணவர்களின் புத்தாக்கச் சிந்தனைகளைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து வரவேற்புரை நிகழ்த்தி, கண்காட்சியின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

இந்த நிகழ்வில் கல்லூரி மேலாளர் தங்கப்பன் பிள்ளை, பொறியியல் கல்லூரி முதல் வர் மணிகண்டன், வளர்ச்சி இயக்குனர் ஜமால் முகமது சுபேர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

# மக்கள் அளிக்கும் புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை: காவல் ஆணையர் உத்தரவு



சென்னை, பிப்.13-

பொதுமக்கள் அளிக்கும் புகார்கள் மீது போலீஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் குற்றச் செயல்களை தடுக்க போலீஸார் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக, ஒவ்வொரு புதன் கிழமையும் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் பொதுமக்களிடம் இருந்து புகார் மனுக்களை காவல் ஆணையர் அருண் நேரில் பெற்று வருகிறார்.

அந்த வகையில், நேற்று 28 பேரிடம் புகார் மனுக்களை அவர் பெற்றுக் கொண்டார். பெறப்பட்ட மனுக்களில், 'காவல் நிலையங்களில் ஏற்கெனவே புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை' என்று குறிப்பிட்டிருந்த மனுக்கள் தனியாக பிரிக்கப்பட்டு, 'இந்த மனுக்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என்று சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

''மக்கள் அளிக்கும் புகார்கள் மீது போலீஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதில் சுணக்கம் காட்டினாலோ, அலைக்கழித்தாலோ, லஞ்சம் வாங்கினாலோ, ஒருதரப்புக்கு சாதகமாக செயல்பட்டாலோ சம்பந்தப்பட்ட போலீஸார் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று ஆணையர் எச்சரித்தார்.



■ வி எஸ் ஆர் மெட்ரிக் பள்ளி மாணவர் சாதனை. தென் மாவட்ட அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டி சேரன்மகாதேவி ஸ்கேட் இன்ஜினியரிங் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. இதில் ரோடு ரேஸ் மற்றும் ரிங் ரேஸ் என இரண்டு பிரிவாக நடத்தப்பட்டது இப்போ போட்டியில் 700க்கும் மேற்பட்ட மாணவர்கள் வெவ்வேறு பள்ளியிலிருந்து பங்கு பெற்றனர். போட்டியில் விஎஸ்ஆர் மெட்ரிக் பள்ளி யூகேஜி மாணவன் முகமது அப்ராஸ்கான் கலந்துகொண்டு, ரோடு ரேஸ் 100 மீட்டர் போட்டியில் மூன்றாம் இடமும் 200 மீட்டர் போட்டியில் இரண்டாம் இடமும், ரிங்ரீஸ் 100 மீட்டர் போட்டியில் மூன்றாம் இடமும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்தார். வெற்றி பெற்ற மாணவனை பள்ளி தாளாளர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் பாராட்டி விருதுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். மேலும் துணை முதல்வர் விஜயா தினகரன் மற்றும் ஆசிரியர்கள் வெற்றி பெற்ற மாணவனை பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 19 வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டியில் எதிரணியினரின் விக்கெட்டுகளை அதிக அளவில் வீழ்த்தி இந்திய அணி கோப்பையை வெல்வதற்கு காரணமான தமிழ்நாட்டைச் சேர்ந்த இளம் விளையாட்டு வீரர்கள் ஆர்.எஸ். அம்ப்ரிஷ் மற்றும் தீபேஷ் தேவேந்திரன் ஆகியோருக்கு பாராட்டு தெரிவித்து அவர்களுடன் கலந்துரையாடினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சத்யபிரத சாகு. இ.ஆ.ப. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர் டாக்டர் அசோக் சிகாமணி, தமிழ்நாடு கிரிக்கெட் சங்க தலைவர் திரு. டி.ஜே.சீனிவாசராஜ் ஆகியோர் உள்ளனர்

# சென்னையில் 3வது நாளாக மறியலில் ஈடுபட்ட மாற்றுத் திறனாளிகள் கைது

சென்னை, பிப்.13-

மாதாந்திர உதவித் தொகையை குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கக் கோரி, சென்னை காமராஜர் சாலையில் மறியலில் ஈடுபட்ட 200க்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகளை போலீஸார் வியாழக்கிழமை கைது செய்தனர்.



ஆந்திராவில் வழங்குவதை போல, தமிழகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகையை குறைந்தபட்சம் ரூ.6 ஆயிரம் ஆக உயர்த்தி வழங்கக் கோரி தமிழக அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில், சென்னையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகம் முன்பாக கடந்த 2 நாட்களாக போராட்டம், மறியல் நடைபெற்றது.

இருப்பினும், இவர்களின் கோரிக்கைகளை நிறைவே ற்றுவது தொடர்பாக தமிழக அரசிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை. மேலும், எந்த பேச்சுவார்த்தையும் நடைபெறவில்லை.

இதன் காரணமாக, போராட்டத்தை தொடர முடிவு செய்தனர். அதன்படி, உதவித் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி, சென்னையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகம் முன்பாக இன்று 3வது நாளாக மாற்றுத் திறனாளிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து, காமராஜர் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதனால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட சங்கத்தின் மாநிலத் தலைவர் தோ.வில்சன், மாநில பொதுச் செயலாளர் பா.ஜான்சிராணி உள்பட 200க்கும் மேற்பட்டவர்களை போலீஸார் கைது செய்து, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்துக்கு அழைத்து சென்றனர்.

இதுபோல, உதவித் தொகையை உயர்த்தி வழங்கக்கோரி, தமிழகத்தில் 36 மாவட்டங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் பராமரிப்பாளர்கள் கைது செய்யப்பட்டதாக தமிழக அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டம் குறித்து, சங்கத்தின் மாநிலத் தலைவர் தோ. வில்சன் கூறுகையில், "எங்களின் ஒற்றை கோரிக்கையை தமிழக அரசு நிறைவேற்றும் வரை எங்கள் போராட்டம் தொடரும். நாளை (பிப்.13) திருவொற்றியூர், சேத்துப்பட்டு, தாம்பரம் ஆகிய இடங்களில் மறியல் போராட்டம் நடைபெறும். தமிழகத்தில் உள்ள அனைத்து தாலுகா அலுவலங்களில் கோரிக்கையை வலியுறுத்தி போராட்டம் நடைபெறும்" என்றார்.



# பூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

சென்னை, பிப்.13-

பூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம். சவுத்ரி மற்றும் அவரது குழுவினர் முதல்கட்ட ஆய்வை நேற்று தொடங்கினர். கட்டுமானப் பணிகள், மின்சாரம், தண்டவாளம் உள்ளிட்டவை ஆய்வு செய்யப்பட்டன.

சென்னையில் 2ம் கட்டமாக, 3 வழித்தடங்களில், 116.1 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறுகின்றன. இதில், கலங்கரைவிளக்கம் பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவிலான வழித்தடத்தின் ஒருபகுதியாக, பூந்தமல்லி வடபழனி வரையிலான 14.64 கி.மீ. தொலைவு உயர்மட்ட தடத்தில் அனைத்து பணிகளும் முடிந்துவிட்டன.

இதைத் தொடர்ந்து, மெட்ரோ ரயில் நிர்வாகம் தரப்பில் பல்வேறு சோதனைகள், பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் பெங்களூருவில் உள்ள மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையருக்கு ஆய்வு மேற்கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது. இந்நிலையில், இத்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அனந்த் மதுகர் சவுத்ரி மற்றும் அவருடைய குழுவினர் முதல் கட்ட ஆய்வை நேற்று தொடங்கினர். முதல்நாள் ஆய்வின் தொடக்கமாக, 4வது வழித்தடத்தில் பூந்தமல்லி புறவழிச்சாலை நிலையம் முதல் ஐயப்பன்தாங்கல் மெட்ரோ நிலையம் வரையிலான 6.134 கி.மீ. தொலைவுக்கு ஆய்வு மேற்கொண்டனர். மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையருடன் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் தி.அர்ச்சுனன் (திட்டங்கள்), மனோஜ் கோயல் (அமைப்புகள் மற்றும் இயக்கம்) மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். முதல்கட்ட ஆய்வின் போது, கட்டுமானப் பணிகள், மின்சாரம், தண்டவாளக்கூறுகள் மற்றும் முக்கிய மேம்பாலக் கட்டமைப்புகள் ஆகியவை விரிவாக ஆய்வு செய்யப்பட்டன. 11 மெட்ரோ ரயில் நிலையங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## "தாய்மை எனும் வரத்தை கொண்டாடுவோம்!



■ அரசு சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் பங்கேற்று, சகோதரிகளுக்கு சீர்வரிசை வழங்கி மகிழ்ந்தோம். ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க தமிழக அரசு என்றும் துணை நிற்கும். மொடக்குறிச்சியில் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்ற இனிய நிகழ்வு.




# விஜயாபதியில் சர்வதேச விளையாட்டு மைய நுழைவு வாயில் சபாநாயகர் அப்பாவு அடிக்கல்

திசையன்விளை. பிப்.12

நெல்லை மாவட்டம் ராதாபுரம் ஒன்றியம் விஜயாபதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் சர்வதேச விளையாட்டு அரங்கம் மற்றும் பயிற்சி மையத்தை சபாநாயகர் செய்தார். பின்னர் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து ரூபாய் 25 இலட்சத்தில் பேவர் பிளாக்குடன் பிரதான நுழைவுவாயில் அமைக்கும் பணியை சபாநாயகர் அப்பாவு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் நெல்லை மாவட்ட பஞ்சாயத்து மற்றும் திட்டக் குழு தலைவர் விஎஸ்ஆர். ஜெகதீஷ், ராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி, வள்ளியூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அலெக்ஸ் அப்பாவு, ராதாபுரம் ஒன்றிய கவுன்சிலர் ஆவுடை பாலன் மற்றும் அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# "அமெரிக்க வலையில் இந்தியாவை சிக்கவைக்கும் ஒப்பந்தம்'' எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம்



புதுடெல்லி, பிப்.13.-

இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் என்பது அமெரிக்க வலையில் இந்தியாவை சிக்க வைக்கக்கூடியது என்று விமர்சித்துள்ள எதிர்க்கட்சி எம்பிக்கள், இந்த ஒப்பந்தத்துக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 11 வது நாளான இன்று, இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. இதில், காங்கிரஸ், சமாஜ்வாதி உள்ளிட்ட இண்டியா கூட்டணி எம்பிக்கள் கலந்து கொண்டனர். அப்போது, இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்த்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர். இந்த ஒப்பந்தம் அமெரிக்க வலையில் இந்தியாவை சிக்க வைக்கும் என்று அவர்கள் எச்சரித்தனர்.

நாடாளுமன்ற மக்களவையில் நேற்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை கடுமையாக விமர்சித்திருந்தார். உலகம் ஒரு உலகளாவிய புயலை எதிர்கொள்கிறது என்பதையும் ஒரு வல்லரசின் சகாப்தம் முடிவுக்கு வருகிறது என்பதையும், தீவிரமடைந்து வரும் புவிசார் அரசியல் மோதல்கள், எரிசக்தி மற்றும் நிதியை ஆயுதமாக்குகின்றன என்பதையும் அரசே ஒப்புக்கொள்கிறது.

இந்த யதார்த்தத்தை உணர்ந்த போதிலும் மத்திய அரசு எதற்காக, அமெரிக்காவின் எரிசக்தி மற்றும் நிதி அமைப்புகளை ஆயுதமாக்க அனுமதித்துள்ளது என்று ராகுல் காந்தி கேள்வி எழுப்பி இருந்தார்.

இந்நிலையில், இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்தும் இது தொடர்பான கூட்டறிக்கை குறித்தும் மக்களவையில் விவாதிக்க வலியுறுத்தி காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி, நோட்டீஸ் ஒன்றை அளித்துள்ளார். அவையின் கேள்வி நேரம், பூஜ்ஜிய நேரம் உள்ளிட்ட பட்டியலிடப்பட்ட அனைத்து அலுவல்களையும் நிறுத்திவிட்டு இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று மணீஷ் திவாரி வலியுறுத்தியுள்ளார்.

# 'வெளிநாட்டு ரயில்களை விட வந்தே பாரத் கட்டணம் குறைவு'



புதுடெல்லி, பிப்.13.-

ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: ரயில் கட்டணத்தை தீர்மானிக்கும்போது, சேவைக்கான செலவு, சேவையின் மதிப்பு, வழங்கப்படும் சேவையின் வகை மற்றும் வசதிகள், மக்களின் வாங்கும் திறன் ஆகிய அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

கடந்த 2019ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட வந்தே பாரத் ரயில் சேவை 82 வழித்தடங்களில் 164 ரயில்கள் இயக்கப்படுகின்றன. 300 முதல் 400 கிலோ மீட்டர் பயணத்துக்கான வந்தே பாரத் ஏசி பெட்டிகளின் இருக்கைக்கான கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு சுமார் ரூ.2.19 ஆக உள்ளது. இது சீனா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் உள்ள இதேபோன்ற ரயில் சேவை கட்டணத்துடன் (ரூ.7 முதல் ரூ.20) ஒப்பிடும்போது மிகவும் குறைவு ஆகும்.

# "எங்கள் தாய் பாரத மாதாவை விற்றுவிட்டீர்கள்" மக்களவையில் ராகுல் காந்தி கடும் விமர்சனம்



புதுடெல்லி, பிப்.13.-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்து வரும் நிலையில் நேற்று எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மக்களவையில் உரையாற்றினார்.

அவையில் ராகுல் காந்தி பேசியதாவது: "நாம் தீவிரமடைந்து வரும் புவிசார் அரசியல் மோதல்கள் நிறைந்த உலகில் வாழ்ந்து வருகிறோம். அமெரிக்காவின் ஆதிக்கத்துக்கு சீனா, ரஷ்யா மற்றும் பிற சக்திகள் சவால் விடுகின்றன.

போர் சகாப்தம் முடிந்துவிட்டதாக பிரதமர் மோடியும், பாதுகாப்பு ஆலோசகரும் சில நாள்களுக்கு முன் தெரிவித்தனர். ஆனால், நாம் போர் சகாப்தத்துக்கு மத்தியில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உக்ரைன், காசா, மத்திய கிழக்கு நாடுகளில் போர்கள் நடைபெற்று வருகின்றன. ஈரானில் போர் அச்சுறுத்தல் இருக்கிறது. நாமும் ஆபரேஷன் சிந்தூரை சந்தித்தோம். டாலருக்கும், அமெரிக்க மேலாதிக்கத்துக்கும் சவால் விடப்படுகிறது.

அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான போட்டியில், மிகவும் மதிப்புமிக்க ஒரு சொத்து இந்திய தரவுகள் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அமெரிக்கா வல்லரசாக தொடர விரும்பினால், டாலரைப் பாதுகாக்க விரும்பினால், அதற்கான வழி இந்தியர்கள் தான்.

மக்கள் தொகை கூடுவது சுமை என்றும், பேரழிவு என்றும் பலர் சொல்கின்றனர். ஆனால், மக்கள் தொகை தான் நம்மிடம் இருக்கக் கூடிய மிகப்பெரிய சொத்து. அது நமது பலம். அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்து நீங்கள் (மத்திய அரசு) இந்தியாவை விற்றுவிட்டீர்கள்.

இந்தியாவை விற்றதில் உங்களுக்கு வெட்கமாக இல்லையா? நீங்கள் எங்கள் தாய் பாரத மாதாவை விற்று விட்டீர்கள். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், பிரதமர் பலனில்லாமல் இந்தியாவை விற்க மாட்டார் என்பது எனக்குத் தெரியும். அவர் ஏன் இந்தியாவை விற்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஏனென்றால் அவர்கள் அவரது கழுத்தைப் பிடித்திருக்கின்றனர்.

ஒன்று தொழிலதிபர் அதானி மீதான அமெரிக்க வழக்கு. மற்றொன்று இன்னும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ள 'எப்ஸ்டீன் கோப்புகள்' தொடர்பானது. எப்ஸ்டீன் தொடர்பான 30 லட்சம் கோப்புகள் வெளியாகி உள்ளன. ஒரு வேளை இண்டியா கூட்டணி அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால், பின்வரும் நிபந்தனைகளை முன்வைத்திருப்போம்.

எங்கள் மக்களின் தரவுகளை நீங்கள் (ட்ரம்ப்) பெற விரும்பினால், எங்களைச் சமமானவர்களாகக் கருதிப் பேசுங்கள். எங்களை உங்களது பணியாட்களைப் போல நடத்தாதீர்கள். இந்திய மக்களின் தரவுகளை அமெரிக்காவிடம் ஒப்படைப்பதன் மூலம் பிரதமர் மோடி இந்தியாவின் எதிர்காலத்தைச் சரணடையச் செய்துள்ளார். இவ்வாறு ராகுல் பேசினார்.

இதுகுறித்து மத்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் KTü§ கூறும்போது, "அவையில் ராகுல் காந்தி பேசியது அனைத்தும் பொய். அவரது பேச்சில் என்னென்ன பொய்கள் உள்ளனவோ, அவற்றை நீக்கக் கோருவோம். இது தொடர்பாக ராகுல் காந்தி ஆதாரங்களை அளிக்குமாறு பேரவைத் தலைவரிடம் நோட்டீஸ் வழங்குவோம்" என்றார்.

# 'தேமுதிக எல்லாம் ஒரு கட்சியா?' ராஜ கண்ணப்பனின் சர்ச்சை கருத்தால் திமுகவுக்கு நெருக்கடி




மதுரை, பிப்.13.-

'தேமுதிக இரு கட்சிகளிடமும் ஒரே நேரத்தில் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. தேமுதிகவெல்லாம் ஒரு கட்சியா? பெரிய கட்சியை பற்றி கேளுங்கள் என்று திமுக அமைச்சர் ராஜ கண்ணப்பன் பேசியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

'தமிழ்நாடு தலைகுனியாது' என்ற தலைப்பில் மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் தொடர்ந்து பொதுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஆனையூரில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சிறப்புரையாற்றினார். அமைச்சர் பி.மூர்த்தி மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

முன்னதாக, மதுரை மாவட்டம் மேலூரில் திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பேசியதாவது: தற்போது போட்டி திமுகவுக்கும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையேதான். ஆர்.பி.உதயகுமார் தென் மாவட்ட அதிமுகவில் தன்னை பெரிய ஆளாக நினைக்கிறார்.

அவர் பெரிய ஆளாக இருக்கட்டும். ஆனால், ஒருவரை அழித்து பெரிய ஆளாகிவிடக் கூடாது. தான் வாழ பிறரை கெடுக்கக் கூடாது. மேலூர் தொகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துள்ளோம். இந்த முறை மேலூரில் திமுகதான் போட்டியிடும். வேட்பாளரை தலைமை முடிவு செய்யும். காங்கிரஸ் கட்சி வேண்டாம் என்று சொல்லவில்லை. கூட்டணியில் வேண்டும் என்றுதான் சொல்கிறோம்.

விஜயகாந்த் இருந்தபோது தேமுதிக எதிர்க்கட்சியாக இருந்தது. இல்லை என்று நாம் சொல்ல முடியாது. தேமுதிக இரு கட்சிகளிடமும் கூட்டணி பேசக்கூடாது. இங்கேயும் பேசுவது, அங்கேயும் பேசுவது என்பது சரியாக வராது. விசுவாசமாக இருந்தால் ஒரு பக்கம்தான் இருக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

தொடர்ந்து செய்தியாளர்கள், தேமுதிகவை பற்றி கேட்டபோது, 'தேமுதிகவெல்லாம் ஒரு கட்சியா, பெரிய கட்சிகளை பற்றி கேளுங்கள்' என்று கூறினார். அண்மையில் புதுக்கோட்டையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது, 'காங்கிரஸில் இருந்து கொண்டு சிலர் உயிரை வாங்குகிறார்கள்' என்ற அவரது பேச்சு சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்நிலையில், மதுரை மாவட்டம் மேலூரில் அவர் தேமுதிகவை விமர்சித்து பேசியது, அக்கட்சியுடன் கூட்டணி வைக்க முயற்சிக்கும் திமுகவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.










# தேர்தல் ஆணைய அதிகாரிகள் சென்னை வருகை: பிப்.17ல் இறுதி வாக்காளர் பட்டியல்



தமிழகம், பிப்.13.-

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் ஆயத்த பணிகளை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் 7 பேர் கொண்ட குழுவினர் நேற்று சென்னை வந்தனர்.

தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளன. அதற்கான ஆயத்தப் பணிகளில், இந்திய தேர்தல் ஆணையம் முழு வீச்சில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் ஆய்வு பணிகளை மேற்கொள்வதற்காக, இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை தேர்தல் ஆணையர்கள் 7 பேர் கொண்ட குழுவினர் டெல்லியில் இருந்து நேற்று பிற்பகலில் சென்னை வந்தனர். சென்னை விமான நிலையத்தில் துணை தேர்தல் ஆணையர் மணீஷ் கார்க் தலைமையிலான குழுவினரை, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

அப்போது, இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையர் மணீஷ் கார்க் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளன. அதற்கான தயார் நிலையை ஆய்வு செய்வதற்காக தேர்தல் ஆணையத்தின் குழுவினராகிய நாங்கள் சென்னை வந்திருக்கிறோம். தேர்தல் நடக்க இருக்கும் மாநிலங்களுக்குச் சென்று ஆய்வு செய்வது, இந்திய தேர்தல் ஆணையத்தின் வழக்கமான நடைமுறை பணி யாகும். அதன்படி, ஆய்வுக்காக நாங்கள் வந்திருக்கிறோம். மாநில நிர்வாக அதிகாரிகளுடன் தேர்தல் தொடர்பாக ஆயத்தக் கூட்டங்கள் நடத்தி, தேர்தலுக்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்வது குறித்து ஆய்வு மேற்கொள்ள இருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்திய தேர்தல் ஆணைய அதிகாரிகள் சென்னை விமான நிலையத்தில் இருந்து கார்கள் மூலம் புதுச்சேரி மாநிலத்துக்கு சென்றனர். புதுச்சேரியில், அந்த மாநில அரசு அதிகாரிகளுடன் ஆய்வை நடத்திவிட்டு, சென்னைக்கு திரும்புகின்றனர். இதன் தொடர்ச்சியாக இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையிலான குழுவினர் விரைவில் சென்னை வரவுள்ளனர்.

அவர்கள் தமிழக அரசு தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், டிஜிபி, மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், வருமானவரி, அமலாக்கத்துறை அதிகாரிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்களுடன் ஆலோசனை நடத்தி ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளனர்.

இறுதி வாக்காளர் பட்டியல்: தமிழகத்தில் கடந்த அக்டோபர் மாதம் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் தொடங்கியது. அப்போது தமிழக வாக்காளர்கள் எண்ணிக்கை 6.41 கோடியாக இருந்தது. முதல் கட்ட எஸ்ஐஆர் பணிகள் முடிந்த நிலையில், வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில் 5.43 கோடி பேர் மட்டுமே இருந்தனர். வாக்காளர்களில் இறந்தவர்கள் 26.95 லட்சம் பேர் உட்பட 97.37 லட்சம் பேர் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து டிச.19 முதல் கடந்த ஜன.31 வரை பெயர் சேர்க்க, திருத்தம் செய்ய அவகாசம் அளிக்கப்பட்டது. அதில், நேரடியாகவும், இணையதளம் வாயிலாகவும் பெயர் சேர்க்க 22.84 லட்சம் பேர் உட்பட 34.75 லட்சம் பேர் விண்ணப்பித்தனர். விண்ணப்பங்கள் பரிசீலனை முடிந்துள்ள நிலையில், வரும் பிப்.17ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாக உள்ளது. இதற்கான பட்டியல் தயாரிப்பு பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதன்பின், புதியவாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகள்

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000